1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, புழல் ஏரி பகுதியில் புதிதாக நவீன வசதிகள் உடைய மைய சிறைச்சாலையை அரசு அமைத்து வருகிறது. கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணி முடிந்து அது முடியும் தருவாயில் உள்ளது. இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் பணி முடிவுற்றுவிடும். பிறகு சென்னையிலே இருக்கின்ற மைய சிறை அங்கு மாற்றப்பட்டு, அந்த இடம் ஜெனரல் ஆஸ்பிடல், எம்.எம்.சி.-க்கு அளிக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலையைப் பொறுத்த வரையிலும், செலவு அடிப்படையிலே அரசு 'கம்பேரடிவ் ஸ்டடி' (Comparative study) ஏதாவது நடத்தி யிருக்கிறதா? திறந்தவெளி சிறையை நடத்துவது நல்லது என்று அரசு கருது கிறதா? சிறையிலே இருக்கின்ற பெண் கைதிகளை கட்டாயம் இந்தத் திறந்த வெளி சிறையிலே கொண்டுவருவது நலம் பயக்காதா? அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, திறந்தவெளி சிறையிலே சிறைவாசிகள் இருக்கின்றபோது, அவர்கள் பணியிலே ஈடுபடுகின்ற காரணத்தால், உழவு போன்ற தொழிலிலே ஈடுபடுகின்ற காரணத்தால். வருவாய் இருக்கிறது. அந்தப் பலன் அந்தச் சிறைவாசிகளுக்கும் கிடைக்கிறது. பெண்களைப் பொறுத்தவரைக்கும் தனியாக அவர்களுக்கு ஒரு திறந்தவெளி சிறைச்சாலை அமைக்க வேண்டுமென அரசு கருதி வருகிறது. அந்தச் சிறையை மதுரையிலே அமைக்கலாம் என அரசு கருதி வருகிறது.

Post of 'Director of Prosecutions'

*71. DR. T. R. JANARTHANAM (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Law and Industries be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government, to create a 'Director of Prosecutions' post ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1984 மார்ச் 7

(முற்பகல் 10-00)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, 'டைரக்டர் ஆப் பிராசிகியூஷன்ஸ்' தலைமைச் செயலகத்தின் ஒரு பகுதியாக (Part of Secretariat) இயங்குமா அல்லது ஸ்டேட் பப்ளிக் பிராசிகியூடர் போல தனியாக இயங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தற்போது, அரசுக் குற்றத்துறை உதவி வழக்குரைஞர்கள், நிலை 2, அரசுக் குற்றத்துறை உதவி வழக்குரைஞர்கள் நிலை 1 என்ற அடிப்படையில் இரு நிலையில் அரசுக் குற்றத்துறை உதவி வழக்குரைஞர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் வட்ட அளவிலே, மாவட்ட அளவிலே மாநிலம் முழுதும் இருக்கிறார்கள். இவர்கள் இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ், அவரது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறார்கள். காவல் துறையும், பிராசிகியூஷன் தரப்பும் பல இடங்களில் இணைந்து செயல்படவேண்டிய நிலையில் இருந்து வருகிறார்கள். இவற்றையெல்லாம் மாற்றி, தனியாக ஒரு அமைப்பு—மாவட்ட அளவிலே ஒரு அதிகாரி, மாநில அளவிலே ஒரு அதிகாரி—என்று ஒட்டுமொத்தமாக ஒரு தனி அமைப்பை உருவாக்கி, 'டைரக்டர் ஆப் பிராசிகியூஷன்ஸ்' என்று மாநில மைய அமைப்பை உருவாக்கி, அந்த அமைப்பின் கீழ் பல கட்டங்களில் அதிகாரிகளை வைத்து தனி அமைப்பாக, தனித் துறையாக உருவாக்க வேண்டுமெனக் கருதி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அது மிகப் பொறுப்பான பதவி. எனவே அரசாங்கம் அனுபவம் மிக்க, சமீபத்தில் ஓய்வு பெற்ற பப்ளிக் பிராசிகியூடர் ஒருவரை நியமிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, எப்போது இந்தப் பதவியை நிரப்புவது என்ற முடிவை இன்னும் அரசு எடுக்கவில்லை. காரணம், கர்நாடக மாநிலத்தில் இந்த முறை செயல்பட்டு வருகிறது. வேறு சில மாநிலங்களில் செயல்பட்டிருந்தும் செம்மையாகச் செயல்படவில்லை என்று வந்திருக்கிறது. நன்மை தீமைகளை ஆராய்ந்து அமைப்பை உருவாக்க வேண்டியிருக்கிறது. திட்டமே இன்னமும் முழுவதும் அரசின் முடிவுக்குக் கொண்டுவரப்படாத நிலையில், யாரை நியமிக்க வேண்டுமென்ற பிரச்சினை எழவில்லை.

1984 மார்ச் 7]

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, 'டைரக்டர் ஆப் பிராசிகியூஷன்ஸ்' என்ற இந்தப் பதவி யாருடைய கண்ட்ரோலில் வரும்? லீகல் விங் ஆக வருமா? போலீஸ் விங்-ஆக வருமா? இதில் இன்னொன்று. இப்போதே பிராசிகியூடர்களைப் பொறுத்தவரைக்கும், அவர்களே வழக்கைப் பதிவு செய்து. சார்ஜ் ஷீட் போடும் வழக்குகளிலேயே பல நேரங்களில் அது அரசுக்கு எதிராகப் போடுகிறபோது, காவல் துறையினர் மீதும், மற்றவர்கள் மீதும் பழி போடுகிற நிலைமை இருக்கிறது. ஒருவர் சார்ஜ் ஷீட் போட்டு, இன்னொருவர் வழக்கை நடத்துகிற நிலை வருகிறபோது. clash of interests, clash of personality வந்து அரசாங்கத் தரப்பு வழக்குகள் அத்தனையும் சீர்குலைவு அடைவதற்கு வாய்ப்பு வந்துவிடாதா? இதுபற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 'லா கமிஷன் ஆப் இந்தியா'-ஐப் பொறுத்தவரைக்கும், அதனுடைய 14-வது அறிக்கையில் காவல் துறையும் பிராசிகியூஷன் ஏஜன்சியும் இரண்டும் தனித்தனியாகப் பிரிக்கப்பட வேண்டும். அப்போது தான் மக்களுக்கு நலன் கிடைக்கும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையில்தான் காவல் துறையிடமிருந்து முழுவதுமாகப் பிரிக்கப்பட்டு தனியாக, உள்துறையின்கீழ் செயல்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே. 'டைரக்டர் ஆப் பிராசிகியூஷன்ஸ்' அவர்களின் விசேஷ அதிகாரம் என்ன? அவர் சொல்லித் தான் 'பிராசிக்யூட்' பண்ணவேண்டுமா? அல்லது போலீசாரே சார்ஜ் ஷீட் போட்டு பிராசிகியூஷன் நடத்துவார்களா? இதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : Director of Prosecutions cannot be empowered to direct that prosecution be proceeded with. It is not feasible. Nor it is legally possible.

அவர்களுடைய பணி தற்போது வட்ட, மாவட்ட அளவிலேயுள்ள அரசுக் குற்றத்துறை உதவி வழக்குரைஞர்களின் பணிகளை முறைப்படுத்துவது, தவறுகள் நேரிடும்போது திருத்தங்கள் செய்திடுவது முதலியவையாகும். தற்போது அரசுக் குற்றத்தை உதவி வழக்குரைஞர்கள் ஒழுங்காகப் பணிகளைச் செய்வதில்லை என்ற குறைபாடுகள் எல்லாம்கூட எழுந்து. அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

Director of Prosecutions would be an authority for taking disciplinary action and such other things.